**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.154/2021**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.11.2025 | | |
| பெயர்: | விஜயராகவன் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | ரங்கநாதன் |
| கிராமம்: | தற்காஸ், பழையார் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | ஆசிரியர் | வயது : | 53/2025 |

**<u>முதல் விசாரணை : 24.11.2025</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 07.01.1970–ம் தேதியிட்ட எனது தகப்பனரார் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. 25.09.2021–ம் தேதியிட்ட தாவா 4வது அயிட்டத்தில் உள்ள ஆர்.சி.சி வீட்டிற்கான வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. 25.09.2021–ம் தேதியிட்ட தாவா 4வது அயிட்டத்தில் உள்ள சுனாமி வீட்டிற்கான வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. 27.09.2021–ம் தேதியிட்ட தாவா 4வது அயிட்டத்தில் உள்ள ஆர்.சி.சி வீட்டிற்கான மின்கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. 25.09.2021–ம் தேதியிட்ட தாவா 4வது அயிட்டத்தில் உள்ள சுனாமி வீட்டிற்கான மின்கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 24.11.2018–ம் தேதியிட்ட பயிர் காப்பீட்டு ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகவும்,

7. 30.11.2019–ம் தேதியிட்ட பயிர் காப்பீட்டு ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆகவும்,

8. 26.05.2003– ம் தேதியிட்ட ரங்கநாதன் என்பவரின் இறப்பு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ 8** ஆகவும்

9. 11.10.2003–ம் தேதியிட்ட ரங்கநாதன் என்பவரின் வாரிசு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ 9** ஆகவும்,

10. 12.08.2020–ம் தேதியிட்ட தாயார் அம்மாள் அவர்கள் இறப்பு சம்பந்தப்பட்ட மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் அசல் **வா.சா.ஆ 10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.